

# தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் பாடுபொருள் மாற்றங்கள்

தொகுதி – III


பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் சு. குமரன்

முனைவர் ஆர். மோகனதாஸ்

362. **வி. வசுமதி** 1753
திருவிளையாடற் புராணத்தில் திருவாசகக் கூறுகள்

363. **இரா. அபிமன்யு** 1759
எட்டுத்தொகையில் பாலைத்திணை பாடுபொருள்

364. **முனைவர் மு. கலைவேந்தன்** 1764
ஔவையாரின் நல்வழிப்பாடல்களின் பாடுபொருளும் பயன்பாடும்

365. **முனைவர் ஸ்ரீ. உமா** 1769
கொங்கு நாட்டு வாழ்வியல் கூறுகளான தாலாட்டில் "தாய்-சேய் உறவு"

366. **முனைவர் ஜோ. சரவணன்** 1773
கண்ணதாசனின் கவிதைகளில் அறிவியல் பாடுபொருள்

367. **மா. நாகராசன்** 1779
கம்பராமாயணம் உணர்த்தும் வாழ்வியல் அறங்கள்

368. **முனைவர் ப. பெரியசாமி** 1784
பிள்ளைத்தமிழும் காலந்தோறும் பாடுபொருள் மாற்றமும்

369. **முனைவர் சௌ. கீதா** 1790
சீவகசிந்தாமணியில் தொன்மங்கள்

370. **முனைவர் நா. பழனிவேலு** 1794
சீவகசிந்தாமணியில் 'காமவின்ப' ஒழிப்புச் சிந்தனைகள்

371. **சு. உமாராணி** 1799
சங்க இலக்கியத்தில் இயற்கை

372. **முனைவர் கு. முத்துக்குமார்** 1804
உலக இலக்கியங்களில் சிலம்பின் ஒலி - பேராசிரியர் ப.மருதநாயகம் ஆய்வை முன் வைத்து

373. **முனைவர் கே. ஈஸ்வரி** 1809
சங்க இலக்கியங்கள் காட்டும் பண்பாடு

374. **முனைவர் ச. பாலமுருகன்** 1814
பழங்குடி மக்களும் வரலாறும்

375. **முனைவர் வ. ஜெயா** 1820
மகாபாரதத்தில் துரியோதனன்

376. **முனைவர் க. முருகேசன்** 1825
தமிழன்பனின் புத்திலக்கியப் பாடுபொருள் நெறிகள்

# 376. தமிழன்பனின் புத்திலக்கியப் பாடுபொருள் நெறிகள்



**முனைவர் க. முருகேசன்**
*தமிழ்த்துறைத்தலைவர்*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோவை - 641 029.*

## முகவுரை

தமிழ்க் கவிதைப் பரப்பில் காலந்தோறும் பல்வேறு கவிஞர்கள் தோன்றித் தங்களுடைய படைப்புகளைத் தமிழன்னைக்கு அணிகளாகச் சூட்டியுள்ளனர். பாடுபொருள் அடிப்படையிலும், படைப்பாக்க உத்திமுறை அடிப்படையிலும் கவிஞர்களுக்கு இடையே வேறுபாடுகள் இருப்பினும், அவற்றையெல்லாம் கடந்து சமூக மேம்பாட்டையும் உலகளாவிய உயிர்க்கருணையையும் கவிதைக்குக் கருவாக்குவதில் ஒன்றுபடுகிறார்கள். அவர்களுள் தரமான கவிதைப் படைப்பில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள கவிஞர் ஈரோடு தமிழன்பன் முப்பத்து மூன்று கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். பூத்துக் குலுங்கும் ஒவ்வொரு புதுமலரும் தனித்த வண்ணமும் நாற்றமும் கொண்டிருப்பதைப் போல தமிழன்பனுடைய ஒவ்வொரு படைப்பும் தனிப்பட்ட வாசிப்பிற்கும் நேசிப்பிற்கும் உரியதாகத் திகழ்கின்றது. புதிய சிந்தனையுடன் சோதிப்பதும், புதிய புதிய வடிவங்களில் கவிதை வார்ப்பதும் அவருக்குக் கைவந்த கலை. தேசிய நோக்கும், புதுக்கவிதை வழியாக ஹைகூ, லிமரைக்கூ அழகோடும் நயத்தோடும் படிமத்தோடும் பொங்கியெழும் கவித்துவத்தோடும் படைத்தளித்துள்ள பனுவல்களின் மூலமாக அறியப்படுகின்ற புத்தாக்கப் பாடுபொருள் நெறிகளை இக்கட்டுரை எடுத்துரைக்க முற்படுகின்றது.

## படைப்பும் வலியும்

"தமிழன்பன் கவிதை நெருப்பின் எல்லாச் சாதிகளிலும் வடிவங்களிலும் தன் பேனா விரல்களைக் கூர்தீட்டிக் கொண்டவர் பரவலாகப் படிமக் கவிஞராக அறியப்பட்டவர் சொற்களை மிகக் கூர்மையாக, சிலிர்புகளாகக் கையாள்பவர். ஆனாலும் அவர் கவிதையின் வேர்கள் சமூக அவலங்களில்தான் கிளை விரித்து வேர் கொண்டுள்ளன. சமூக அவலங்களின், சமூகக் கொடுமைகளின் வெப்பத்தையே நீராகவும் உரமாகவும் அவருடைய கவிதை வேர்கள் உள்ளிழுத்துக் கொண்டன. அவருடைய சொற்களும், படிமங்களும் இயற்கைக் கவிதைக் குறிகளும் மலர்களைப் போல அலங்கார அழகு நளினங்களுடனிருந்தாலும், உள்ளே தவிப்பு மிகுந்த நெருப்பு மணமே மலர்ந்து கொண்டிருக்கிறது" (முனைவர் இரா. சந்திரசேகரன், "தவிப்பும் தகிப்பும் அறைதலின் வலியும்" கட்டுரை, ஈரோடு தமிழன்பன் கவிதையாக்கம் சில தடத்தெரிவுகள், வ. ஜெயதேவன் (பதி), பக்.